# தமிழக மீனவர்களைக் காக்க கச்சத் தீவை மீட்போம்!

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் துயரங்களுக்கு ஆளாவது தினமும் செய்திகளாக ஏடுகளில் வந்தவண்ணம் இருக்கின்றன. சமீபத்தில் சில நாள்களில் 7 முறை மீனவர்கள் தாக்கப்பட்டு பலியாகியுள்ளனர். தற்போது குமரியில் ஐந்து மீனவர்கள் சிங்கள கடற்படையினரால் பலியாக்கப்பட்டு உள்ளனர் என்ற கொடூரச் செய்தியும் தமிழகத்தை வாட்டியுள்ளது. இதற்குக் காரணம், கச்சத் தீவைக் கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் ஆட்சியாளரின் எவ்வித எதிர்ப்பும் இன்றி இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே 26.6.1974 மற்றும் 23.3.1976 ஆகிய இரண்டு தேதிகளில் நடைபெற்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழர்களின் நலன்களைச் சிறிதும் சிந்திக்காமல் தாரை வார்த்துக் கொடுத்ததாகும். இதனால் பல சிக்கல்கள் ஏற்பட்டன.

115 முறைக்கும் மேல் இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்கு 300 தமிழக மீனவர்கள் பலியாகி இருக்கின்றனர். பல படகுகள் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன. தமிழக மீனவர்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தோணியார் கோவில் திருவிழாவுக்குச் செல்லும் உரிமை கூட தமிழக மீனவர்களுக்கு மறுக்கப்படுகிறது. இதனால் திருவிழாக்கள் பலசமயம் நிறுத்தப்பட்டும் உள்ளன. இதற்குத் தீர்வு கிடைக்க வேண்டுமானால் கச்சத் தீவை இலங்கையிடமிருந்து இந்தியா மீட்க வேண்டும்.

கச்சத் தீவு என்பது பசுமை நிறம் வளத்தைக் கொண்டதால் பச்சைத் தீவு என்று வழங்கப்பட்டு, கச்சன் - கச்சம் என்ற ஆமைகள் அதிகமாக இத்தீவில் இருந்த காரணத்தால் 'கச்சத் தீவு' எனப் பெயர் பெற்றது. ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் அப்பாவி மீனவர்கள் சில சமயம் தெரியாமல் இந்திய எல்லையைத் தாண்டினால் ஈவு இரக்கமின்றிக் கடுமையாகத் தண்டிக்கப்படுகின்றனர். இந்த மீனவர்கள் இந்திய எல்லையைத் தாண்டினாலும் எவ்விதத் தீங்கும் விளைவிக்க மாட்டார்கள் என்ற எண்ணம் இருந்தும், திட்டமிட்டு இலங்கை அரசால் கொடுமைப்படுத்தப்படுகின்றனர்.

இந்த நிலைக்குக் காரணம், ஆண்டாண்டு காலமாகக் கச்சத் தீவிலிருந்து மீன் பிடிக்கும் உரிமை, மீன் பிடி வலைகள் உலர்த்தும் உரிமையாகக் குறைக்கப்பட்டது. இலங்கை அரசுடன் மத்திய அரசு ஏற்படுத்திக் கொண்ட  உடன்படிக்கையும் தான் இதற்குக் காரணம். இந்த உடன்படிக்கையின்படி, தங்களின் மீன் பிடி வலையைக் கூட உலர்த்தச் செல்ல முடியாத சூழ்நிலை இன்றைக்கும் இருக்கிறது.

இலங்கை அரசின் கடற்படையினர் உடன்படிக்கையின்படி நடக்க மறுப்பதால் தமிழக மீனவர்கள் சந்திக்கும் துயரங்கள் அளவிடற்கரியன. கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கச்சத் தீவின் அருகில் செல்லும்பொழுது, துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி மடிகின்றனர். அல்லது கைதிகளாக இலங்கைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். இந்தப் பிரச்னை பல்வேறு சமயங்களில் இந்திய நாடாளுமன்றத்திலும், தமிழக சட்டமன்றத்திலும், பல்வேறு அரசியல்

கட்சிகளின் மேடைகளிலும் பேசப்படுவதோடு, கச்சத் தீவை இந்தியா திரும்பப் பெற வேண்டும் என்ற வாதங்களையும் எடுத்து வைக்கின்றனர்.

கடந்த 3.10.1991 - இல் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழக சட்டமன்றத்தில், கச்சத் தீவைத் திரும்பப் பெற வேண்டும் என்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு தமிழக அரசு அனுப்பி வைத்தது. அந்தத் தீர்மானம் பின்வருமாறு:

"தொன்றுதொட்டு தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கடற்கரைகளில் வாழ்ந்து வந்த தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள கடலில், குறிப்பாகக் கச்சத் தீவின் அருகில் மீன் பிடித்து அன்றாட ஜீவனத்தை நடத்தி வந்ததும், வருவதும் வரலாற்று உண்மையாகும். 1974 மற்றும் 1976 - இல் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தங்கள், இந்த இரு நாடுகளுக்கும் இடையே உள்ள கடல் எல்லைகளில் எந்தெந்த உரிமைகளை அனுபவித்து வந்தனவோ, அந்தந்த உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிக்கலாம் என்கிற அடிப்படையில், தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் கச்சத் தீவுக்கு அருகிலுள்ள கடலில் தொடர்ந்து மீன்பிடித்துத் தங்களுடைய ஜீவனத்தை நடத்த முற்பட்டனர்.

ஆனால், இந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு மாறாக, இலங்கைக் கடற்படையினர், தமிழக மீனவர்கள் தங்களுடைய வழக்கப்படி கடலில் மீன் பிடிக்க முயலும்போதெல்லாம் அவர்களைத் தாக்கியும், துன்புறுத்தியும், வலைகளை அறுத்தும், விசைப் படகுகளைக் கைப்பற்றியும், படகுகளை மூழ்கடித்தும் பலவிதமான இன்னல்களுக்கு ஆளாக்கி வருகின்றனர். இதுபோன்ற விரும்பத் தகாத நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளை அவ்வப்பொழுது தமிழ்நாடு மைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

அண்மையில் இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள்மீது தாக்குதலை அதிகப்படுத்தியுள்ளனர். தாக்குதலின் உச்சகட்டமாக தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, மீனவர்களைக் காயப்படுத்தியுள்ளனர். கச்சத் தீவின் அருகில் இவர்கள் மீன் பிடித்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக இக்கொடுமைகள் யாவும் நடந்துள்ளன.

1983 - ஆம் ஆண்டு முதல் 1991 - ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முடிய இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திய நிகழ்ச்சிகள் 236 ஆகும். 303 படகுகள் தாக்கப்பட்டிருக்கின்றன. 486 மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். 51 படகுகள் நாசமாக்கப்பட்டுவிட்டன. 135 மீனவர்கள் மரணம் அடைந்துள்ளனர். 57 மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டினால் காயம் அடைந்துள்ளனர். இலங்கை கடற்படை 65 மீனவர்களின் விசைப் படகுகளைக் கைப்பற்றியும், 205 மீனவர்களைக் கைது செய்தும் உள்ளனர். குறிப்பாக, இவ்வாண்டு இந்த நிகழ்ச்சியின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. தமிழக மீனவர்கள் மீது ஒருவித காரணமும் இல்லாமல், இலங்கைக் கடற்படையினர் இப்படித் தாக்குதல் நடத்தித் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, அவர்களுக்குப் பலவித இன்னல்களைத் தொடர்ந்து செய்து வருவதைத் தமிழ்நாடு சட்டப்பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தக் கண்டனத்தை மய்ய அரசின் மூலமாக இலங்கை அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறது.

இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்ட இந்திய மீனவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை அரசிடமிருந்து நஷ்ட ஈட்டினை வற்புறுத்தி மய்ய அரசு பெற்றுத் தர வேண்டும் என்றும், தமிழக மீனவர்கள் அமைதியான வாழ்க்கை நடத்திடத் தேவையான சுமூகமான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் எனவும், தமிழ்நாடு சட்டப் பேரவை கேட்டுக் கொள்கிறது."

கச்சத் தீவு, உண்மையில் இராமநாதபுரம் சேதுபதி அரசருக்குச் சொந்தமானது. இத்தீவில் மருத்துவத்திற்குத் தேவைப்படும் பல்வேறு மூலிகைகளும், உமிரி, சாயவேர் என்ற பச்சிலைகளும் இருந்தன. இதைப் பெற ஜனாப் முகமது காதர் மரைக்காயர், முத்துசாமி பிள்ளை என்ற வணிகர்களுக்கு அரசர் சேதுபதி ஐந்து ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு வழங்கி இருந்தார். (ஆவணம்: இராமநாதவுரம் துணைப் பதிவாளர் அலுவலக ஆவண எண்.510/70, தேதி: 2.7.1980) ஆண்டாண்டு காலமாக, இத்தீவு இராமநாதபுரம் அரசின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக இருந்தது. அதற்குப் பின்பு, 1947 - இல் ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்தின் மூலம் இந்தியாவிற்குச் சொந்தமானது.

கச்சத் தீவு பாக். ஜலசந்தியில் இந்தியாவின் தென் கடற்கரையில் பாம்பன் தீவுக்கு அருகில் உள்ளது. இதன் பரப்பளவு கிட்டத்தட்ட சுமார் 4 மைலாகும். சுமார் ஒரு மைல் நீளமும் சுமார் 1,000 அடி அகலமும் கொண்டதாகும். இத்தீவு பவளப் பாறைகளைக் கொண்டதாகும். கள்ளி, கத்தாழை, கருவேல மரங்கள் இங்கு மிகுந்து காணப்படுகின்றன. கடந்த காலங்களில் ஆங்கிலேயக் கப்பற்படையினர் இத்தீவை வெடிகுண்டு சோதனை செய்யவும், தங்களுடைய பொழுதுபோக்கிற்கு ஏற்ற இடமாகவும் தெரிவு செய்து வைத்திருந்தனர். 1955 - ஆம் ஆண்டு இலங்கை அரசு கச்சத் தீவில் தன் கடற்படை வீரர்களுக்கு பயிற்சி அளிக்க முடிவு எடுத்த முயற்சியை இந்திய நாடாளுமன்றம் கண்டித்தது. அன்று முதல் இப்பிரச்சினை தெரியலாயிற்று. இந்த விவகாரம் பற்றி பண்டித நேரு நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டதாவது: "போதிய செய்திகள் இந்த விவகாரம் பற்றி இந்திய அரசுக்கு இல்லை. கச்சத் தீவு பற்றிய குறிப்பேடுகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இந்தச் சிறு தீவு பற்றி இரு நாடுகளும் போராட வேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை. இந்தியாவின் தன்மானம் இந்தப் பிரச்னையில் கலக்கவில்லை. அதுவும் குறிப்பாக நம் பக்கத்து நாடான இலங்கையுடன்."

பன்னாட்டு அரசியலில் அணி சேராக் கொள்கை என்ற அடிப்படையில் இந்தப் பிரச்சினையில் ஆர்வம் காட்டவில்லை. நாடாளுமன்றத்தில் பல சமயம் இந்தப் பிரச்னை எழுந்தபொழுது முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி பாராமுகமாக இருந்தார்.

இப்பிரச்னையை நாடாளுமன்றத்தில் வைகோ அவர்கள் எழுப்பியுள்ளார். மீனவர் மீது இலங்கைக் கடற்படையின் தாக்குதலைத் தடுத்து நிறுத்துவதற்காக வைகோ கடந்த 13 ஆண்டுகளில் 20 முறை பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார். இதுகுறித்து தொடர்ந்து பல தீர்மானங்களின் மூலம் மறுமலர்ச்சி தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்றத்தில் கச்சத் தீவு குறித்து 23.7.1974 - இல் இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினரும் பார்வர்டு பிளாக் தலைவருமான பி.கே. மூக்கையா தேவர் கண்டனத்தைத் தெரிவித்துவிட்டு நாடாளுமன்றத்தில் வெளிநடப்பு செய்தார். அதுபோன்று

பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர்  முகமது செரீப்பும் வெளிநடப்பு செய்தார். அச்சமயத்தில் முரசொலி மாறன் நாடாளுமன்றத்தில் மௌன முனியாக அமைதி காத்தார்.

கம்யூனிஸ்டு தலைவர் கல்யாணசுந்தரம், இரா. செழியன், நாஞ்சில் மனோகரன், முன்னாள் அமைச்சர் செ.மாதவன், பழனியாண்டி போன்றோர் நாடாளுமன்றத்தில் இப்பிரச்னை குறித்து பேசி உள்ளனர். பல வகையில் இந்தியாவின் ஓர் அங்கமாக இருக்கக் கூடிய கச்சத் தீவைத் தாரை வார்த்துக் கொடுத்ததும், இலங்கை அரசு அதைச் சொந்தம் கொண்டாடுவதும் சற்றும் நியாயம் கிடையாது. இந்தியாவுக்குச் சொந்தம் என்பதற்குக் கீழ்காணும் ஆவணங்கள் சான்று கூறுகின்றன.

1. இராமநாதபுரம் அரசரின் ஆட்சிச் செயலர் (Administrative Secretary) 20.4.1950 - இல் எஸ்டேட் மேலாளருக்கு எழுதிய மடலில் 1929 – 1945 - ஆம் ஆண்டுகளில் மீன் பிடித் துறைகளைப் பற்றிய கோப்புகள் அனுப்பப் பட்டிருக்கின்றன என்றும், அந்தக் கோப்புகளில் கச்சத் தீவைப் பற்றியது ஒன்றும் என குறிப்பிடப்பட்டுள்ளது.
2. தூத்துக்குடியில் இருந்த முத்து, மீன்வளத் துறையின் உதவி இயக்குநரின் கடிதத்தோடுக் கூடிய (1943) திரு.ஆர்.கணேசன் என்பவர் தயாரித்த நிலப் படத்தில் கச்சத் தீவு குறிக்கப்பட்டுள்ளது.
3. 1913 - ஆம் ஆண்டிலிருந்து 1928 வரைக்குள்ளான 15 ஆண்டுகளுக்குச் சங்கு, சிப்பி, மீன்வளத் துறைக்கான ஆங்கில அரசு விட்ட குத்தகை இடங்களில் கச்சத் தீவும் ஒன்று. 1936 - இல் குத்தகை விதிகள் புதுப்பிக்கப்பட்ட போதும், கச்சத் தீவு இந்தக் குத்தகை இடங்களில் ஒன்றாக இருந்தது.
4. 19.2.1922 - இல் இராமநாதபுரத்தின் திவானாக இருந்த திரு.ஆர்.சுப்பையா நாயுடு என்பவர், ஆர்.இராஜேசுவர சேதுபதிக்குத் தம் கடல் எல்லைகளைப் பற்றித் தந்த விளக்கங்களில், கச்சத் தீவைப் பற்றிய விவரம் அடங்கியுள்ளது. இந்த ஆவணம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள்: 27.2.1922.
5. இராமநாதபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் 4.2.1985 ஆம் நாளன்று, கச்சத் தீவு குத்தகைக்கு விடப்பட்டு ஒப்பாவணம் செய்யப்பட்டது. (ஆவண எண்:134/85)
6. 1.7.1947 முதல் 30.6.1949 வரை கச்சத் தீவு குத்தகையாக விடப்பட்டது. குத்தகை ஒப்பாவணம் பதிவு செய்யப்பட்ட நாள் 26.7.1947. இராமநாதபுரம் சார் பதிவாளர் அலுவலக எண். 278/48.

கச்சத் தீவு இலங்கைக்குச் சொந்தமானது அல்ல என்று இலங்கை அமைச்சர் செயலாளர் கூறுகின்றார். ஆங்கிலேய அரசு, அரசி விக்டோரியா காலத்தில் எல்லை பற்றிய அறிவிப்பில் கச்சத் தீவு குறிப்பிடப்படவில்லை. இத்தீவு இராமநாதபுரம் சமஸ்தானத்திற்குச் சொந்தமானது என்று அமைச்சரின் செயலாளர் பி.பி.பியரிஸ் கூறுகிறார்.

எனவே, கச்சத் தீவு இந்தியாவிற்குச் சொந்தமானது என்று தெளிவாகத் தெரியும்போது, மத்திய அரசு இதில் மெத்தனப் போக்கில் இருப்பது, தமிழகத்தைக் குறிப்பாக இந்திய மீனவர்களை வஞ்சிக்கும் செயலாகும். கச்சத் தீவைத் திரும்பப் பெறுவதில், இந்தியா தன்னுடைய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

பன்னாட்டு அளவில் இப்படிப்பட்ட சிக்கல்கள் பல காலங்களில் எழுந்துள்ளன. அமெரிக்க நாட்டிற்கும் - நெதர்லாந்து நாட்டிற்கும் பால்மாஸ் தீவு பிரச்சினையிலும், டென்மார்க் நாட்டிற்கும்

- நார்வே நாட்டிற்கும் இடையிலான கிழக்கு கிரீன்லேண்ட் திவு பிரச்சினையிலும், பிரிட்டன் நாட்டிற்கும் பிரான்சுக்கும் இடையிலான மின் கொயர்ஸ் - எக்ரோ என்ற தீவுப் பிரச்சினையிலும் சிக்கல்கள் எழுந்துள்ளன. இந்தப் பிரச்சினைகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட முடிவின்படி கச்சத் தீவும் இந்தியாவிற்குச் சொந்தம் என்று நிச்சயமாக நிரூபித்தும், சட்டத்தின் மூலமாகவும், பன்னாட்டுச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள மரபுகள் மற்றும் உடன்படிக்கையின் அடிப்படையிலும் திரும்பப் பெறலாம்.

இந்தியப் பெருங்கடலில் டீகோ - கார்ஸியாவில் அமெரிக்க ஆதிக்கம் கால் வைத்ததை இந்தியா வன்மையாகக் கண்டித்தது. அப்படிப்பட்ட ஆதிக்க சக்திகள் இலங்கையின் தயவால் கச்சத் தீவை நெருங்க முடியும். அதனால் இந்தியாவினுடைய பாதுகாப்பிற்கும், இறையாண்மைக்கும் பிற்காலத்தில் ஆபத்து ஏற்படும்.

**கச்சத் தீவால் ஏற்படும் நன்மைகள்**:

1. இலங்கையில் வெளி ஆதிக்க சக்திகள் தலையீட்டால் இந்தியாவுக்கு நேரக்கூடிய பாதுகாப்பு அபாயங்களைத் தடுக்க இது ஒரு பாதுகாப்பு அரணாக இருக்கும்.
2. இந்தீவு இந்தியாவுக்குப் பாதுகாப்பு வளையமாகவும், சேதுக் கால்வாய்த் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் பல்வேறு வகைகளில் பயன்படும்.
3. அணு ஆராய்ச்சிக்கு ஏற்ற இடமாகும்.
4. இந்தியக் கப்பற்படையினருக்குப் பயிற்சி களமாக அமைய ஏற்றப் பகுதியாகும்.
5. போர் விமானங்கள் இறங்கவும் இத்தீவு ஒரு திட்டாக அமையும்.
6. செய்தித் தொடர்பு, கடல் எச்சரிக்கை போன்ற தொடர்புச் சாதனங்கள் பயன்படுத்த இத்தீவு ஏற்றதாக இருக்கும்.
7. மீன் மற்றும் கடல் செல்வங்களைப் பற்றிய ஆராய்ச்சிக்கு ஏற்ற இடமாகவும் இருக்கும்.

எனவே, மீனவர்கள் பிரச்னையும், இந்தியப் பாதுகாப்பு, இந்தியப் பெருங்கடலில் வளர்ந்துள்ள அபாயம் போன்ற காரணங்களை வைத்து ஆராய்ந்தால் மத்திய அரசு கச்சத் தீவை உடனே மீட்க அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வது மிகவும் அவசியமானது.

**ஜனசக்தி**, 04.04.2007